**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

# திராவிடப் போராளிகள் 18

■ வழக்கறிஞர் அருள்மொழி

# ‘இசைஞானியார்’ தாமரைக்கண்ணி!

*1939-ஆம் ஆண்டு ஜூலை 16, அருப்புக்கோட்டையில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது தமிழர் மாநாட்டில் ஈ.வெ.ராமசாமி பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தபோது திருவாட்டி வ.பா.தாமரைக்கண்ணி அம்மையார் என்பவர் நிகழ்த்திய உரையை ‘விடுதலை’ ஏடு பின்வருமாறு தலைப்புடன் வெளியிட்டது:*

*‘பார்ப்பனீயத்தால் வந்த கேடு.*
*ஆராய்ச்சி அறிவு புறக்கணிக்கப்பட்டது.*
*குருட்டு நம்பிக்கை வளரலாயிற்று.*
*சாதிப்பேய் தலைவிரித்தாடுகிறது.*
*வ.பா.தாமரைக்கண்ணி அம்மையார் விளக்கம்.’*

## யார் அந்த தாமரைக்கண்ணி அம்மையார்?

சென்ற நூற்றாண்டில் சுயமரியாதை இயக்கமும் தமிழியக்கமும் இணைக் கோடுகளாய் பயணித்த வரலாற்றின் சாட்சிதான் தாமரைக்கண்ணி அம்மையாரின் வாழ்க்கை. அவரது இயற்பெயர், ஜலஜாட்சி. அவர் பிறந்த தேதி 1911- ஆம் ஆண்டு ஜனவரி 6. அவரது தந்தையார் வேலூர் மாணிக்கம் அவர்கள், அஞ்சல் துறையில் உயர்நிலை அதிகாரியாகப் பணியாற்றினார். ‘திருவிளக்கு’ என்ற தமிழேட்டை நடத்தி வந்தார். தாயார் பெயர் யசோதா. பக்தியும் தமிழ்ப் பற்றும் நிறைந்த குடும்பம்.

தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு, தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை, சைவத் திருமுறைகளில் தேர்ச்சி, சிறந்த இசைப் பயிற்சி, தங்குதடையற்ற பேச்சாற்றல், எழுத்தாற்றல் எனப் பன்முகத் திறமை வாய்ந்தவர் ஜலஜாட்சி. ‘தமிழ்த் தென்றல்’ திரு.வி.க. அவர்களின் ‘வாழ்க்கைக் குறிப்புகள்’ நூலில் அவரை ‘இசைஞானியார்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

1929- ஆம் ஆண்டில் வல்லை பாலசுப்ரமணியம் என்ற தமிழறிஞரை மணந்தார். வல்லை பாலசுப்ரமணியம் அவர்கள் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர். ஆங்கிலப் புலமையும் பெற்றவர். ‘தமிழர் திருமண முறை’ என்று ‘தமிழறிஞர் மயிலை சிவமுத்து’ அவர்கள் எழுதிய நூலை, ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டவர். சுயமரியாதை இயக்கத்தின் மீது மிகுந்த பற்றுடையவர். எனவே, இயல்பாகவே ஜலஜாட்சியின் இலக்கிய உள்ளம் சுயமரியாதை இயக்கத்தின் மீது ஆர்வம் கொண்டது.

தந்தை பெரியாரின் புரட்சிக் கருத்துகள் சமுதாயத்திலே ஏற்படுத்திய மாறுதல்களைக் கண்டு வியந்தார். பெண்கள் சமூகம், பெரியாரின் சிந்தனைகளால் அடைந்த முன்னேற்றத்தைப் பல மேடைகளில் முழங்கினார். அந்தக் காலகட்டத்தில்தான் தாய்மொழியின் தன்மானம் காக்க வேண்டுமானால் நம் பெயர், தமிழ்ப் பெயராக இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஓர் இயக்கமாக உருவெடுத்தது.

## தமிழாய் மலர்ந்த ‘தாமரை’

சூரியநாராயண சாஸ்திரியார், பரிதிமாற் கலைஞர் ஆனதும், வேதாசலம், மறைமலை (அடிகள்) ஆனதும் தமிழ்ப்பற்றின் காரணமாக நடந்தவையே. எனினும், அவர்களைப் பின்பற்றித் தங்கள் பெயர்களைத் தனித்தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆனால், திராவிட இயக்கம் எழுச்சி பெற்ற காலத்தில்தான் ‘எங்கும் தமிழ்’ என்னும் உணர்ச்சி தமிழரிடம் ஓங்கி வளர்ந்தது.


திராவிடக் கொள்கையுள்ள குடும்பத்தின் அடையாளம் ‘தமிழ்ப் பெயர்ச் சூட்டுதல்’ என்ற கருத்து நிலைபெற்றது. தமிழறிஞர் மயிலை சிவமுத்து அவர்களின் தமக்கையார் பெயர் புஷ்பவதி. அவர் தன்பெயரை மலர்முகத்தம்மையார் என்று மாற்றிக் கொண்டார். அவரைப் போலவே ஜலஜாட்சிதன் பெயரை தாமரைக்கண்ணி என்று மாற்றிக் கொண்டார். இருவரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள். 1938-ஆம் ஆண்டு சென்னை ஒற்றைவாடை அரங்கில் நடைபெற்ற தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில் பெரும் பங்காற்றியவர்கள். சிறை சென்றவர்கள். அந்த மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவரான தாமரைக்கண்ணி அம்மையாரின் உரை, வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

## ‘நாம் எதை வெறுக்கிறோம்!

**மக்கள் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், வாயிருந்தும் உமைகளாய், அறிவிருந்தும் மூடராய்த் திரிந்தார்கள். பெண்கள் அடிமைகளாகக் கருதப்பட்டனர்.**

“ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வொரு விதமான பீடை தொன்று தொட்டுப் பீடித்து வந்திருக்கிறது. பார்ப்பனீயம், வைதீகம், பிறப்பினால் உயர்வு தாழ்வு, சாதிவேறுபாடு, பெண்ணடிமை, மதத்தின் பெயரால் குருட்டு நம்பிக்கை ஆகிய இந்தக் கொள்ளை நோய்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே எமது நாட்டை அலைக்கழித்து வந்திருக்கின்றன. இவற்றுள் பார்ப்பனீயமும் வைதீகமும் மிகமிகக் கொடியவை.

நாம் எதை வெறுக்கிறோம். பார்ப்பனீயம், வைதீகம் என்று சொன்ன உடனேயே, ‘இவை இரண்டும் வைதீகப் பார்ப்பனர்களிடத்தில்தான் குடிகொண்டிருக்கின்றன’ என்று நான் சொல்வதாகவும், நான் பார்ப்பன விரோதியென்றும் நீங்கள் கருதிவிடக்கூடாது. பார்ப்பனர்களாகப் பிறந்தவர்கள் எவ்வளவோ பேர்களிடத்தில் நாம் இக்குற்றங்களைப் பார்ப்பதில்லை. அவர்களையெல்லாம் வெறுப்பதற்கு நான் தயாராகவுமில்லை. அப்படிச் செய்யும்படி ராமசாமி பெரியார் நமக்குச் சொல்லவுமில்லை. ஆனால், வைதீகப் பார்ப்பனர்களிடத்தில் நாம் காண்பதை விடப் பன்மடங்கு கொடிய பார்ப்பனீயத்தையும் வைதீகத்தையும் சில பார்ப்பனரல்லாதாரிடத்தில் நாம் காண்கிறோம். ஆகவே ‘பார்ப்பனீய மனப்பான்மை’ எங்கிருந்தாலும் அதை நாம் வெறுக்கிறோமேயன்றி ஆள்களை அல்லவென்பதை நீங்கள் நன்றாய் உணர வேண்டும்.



ஓவியம் : ரவிபேலட்

புத்தர் பெருமான் தோன்றிய காலத்திலிருந்த பார்ப்பனீயக் கொடுமையைக் காட்டிலும் தற்போதைய பார்ப்பனீயக் கொடுமை எவ்விதத்திலும் குறைந்து விடவில்லை. தற்போதைய பார்ப்பனீயத்தின் பலனாக ஆராய்ச்சியும் அறிவும் புறக்கணிக்கப்பட்டன. குருட்டு நம்பிக்கையும் மூடபக்தியும் மதிப்புப் பெறலாயின. கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் புண்ணிய பாவத்தின் பேராலும் மோட்ச நரகத்தின் பேராலும் மக்கள் வஞ்சிக்கப்பட்டு, அவர்களிடமிருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கோயில்கள் வேசி வீடுகளாயின. சாதிப்பேய் தலைவிரித்தாடியது. பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டது.

ஒரு மனிதன் பிறிதொரு மனிதனைப் பார்த்து ‘நீ என்னைத் தீண்டக்கூடாது’ என்று ஊளையிட்டான். மக்கள் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், வாயிருந்தும் ஊமைகளாய், அறிவிருந்தும் மூடராய்த் திரிந்தார்கள். பெண்கள் அடிமைகளாகக் கருதப்பட்டனர். அவர்களுக்குச் சொத்து சுதந்திரம் கிடையாது. அவர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. ஆடவர்களின் காம இச்சையைப் பூர்த்தி செய்யும் விளையாட்டுப் பொம்மைகளாகக் கருதப்பட்டனர். இளம் விதவைகளின் கண்ணீர் வற்றாமல் ஊற்றெடுத்தது, அதைத் துடைப்பவர் எவருமில்லை.

இப்படிப்பட்ட கேடுகளினின்று நமது நாட்டைக் காப்பாற்றுவதற்காகப் பல நூற்றாண்டுகளாகப் பல பெரியார்கள் தோன்றினார்களென்றாலும், அவர்களில் இரண்டு பேர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். ஒருவர், ஒரு நூற்றாண்டுக்கு முன் வடஇந்தியாவில் வங்காளத்தில் தோன்றி ‘பிரம்ம சமாஜ’ இயக்கத்தைத் தொடங்கிய ‘ராஜாராம் மோகன் ராய்’ என்பவராவார். மற்றொருவர் தென்னிந்தியாவிலே ஈரோட்டில் தோன்றி, இப்போது நம்மிடையே இருக்கும் ‘ராமசாமி பெரியார் ஆகிய இருவரும்தான்” என்று அருப்புக்கோட்டையில் உரையாற்றினார்.

அவரது எழுத்துகளோ அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்பட்டன. அவரது கட்டுரைகள் ‘விடுதலை’, ‘நம்நாடு’, ‘செந்தமிழ்ச்செல்வி’, ‘நித்திலக்குவியல்’, ‘அமுதசுரபி’, ‘போர்வாள்’, ‘தமிழ் முரசு’ (மலேயா), ‘உலோபகாரி’, ‘பாசறை’, ‘சித்தாந்தம்’ உட்பட பல்வேறு இதழ்களில் வெளிவந்தன. அவர் எழுதிய ஒரு நூலின் தலைப்பு ‘அழகை வெறுத்த அழகி’ என்பதாகும்.

## தமிழ்முறைத் திருமணங்கள்!

தமிழ்முறைத் திருமணங்களை நடத்தி வைப்பதும், சுயமரியாதைத் திருமணங்களை நடத்துவதும், வாழ்த்துரைகள் வழங்குவதும் அவரது விருப்பத்துக்குரிய பணிகளாக இருந்தன. தமிழ்நாடு மாணவர் மன்றத்தின் தலைவராகச் செயல்பட்ட தாமரைக்கண்ணி அம்மையார், பேரறிஞர் அண்ணாவுக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்துள்ளார்.

இவ்வாறு தமிழ் இன மொழி உயர்வுக்காக இறுதிவரை இயங்கி வந்த அந்த தன்மானப் பேரொளியின் வாழ்வு 1971 -ஆம் ஆண்டு ஏப்ரல் 30 அன்று முடிவுற்றது. எனினும், திராவிட இயக்கத்தின் வரலாற்றில் நிலைபெற்று நின்றுவிட்டது, தாமரைக்கண்ணி அம்மையாரின் தொண்டு!

(வருவார்கள்...)

## இனி என்ன நடக்கக்கூடும்?

தமிழ்நாட்டில் ‘சங்கித்துவ அழுத்தம்’ குறையும். காங்கிரஸ் தலைமையை ஏற்க வேண்டிய அழுத்தம் எதிர்க்கட்சி முகாமில் கூடுதலாகும். காங்கிரசுக்குள் மல்லிகார்ஜுன கார்கேவின் மரியாதை, முன்னிலை சிறிதேனும் கூடும். 2024 தேர்தலில் முதலீடு செய்யும் முதலாளிகள் காங்கிரசை புறக்கணிப்பது கடினமாகும். காங்கிரஸ் அருநீர்ப் பறவைகள் பறக்க யோசிக்கும். ஊடக முதலாளிகள் கொஞ்சம் சாய்வைச் சரிசெய்து கொள்ள விரும்பலாம்.

தனது சறுக்கல்களைச் சரி செய்துகொள்ளவும் பிம்ப மேலாண்மையை மேம்படுத்தவும், புதிய தேர்தல் அணுகுமுறையை உருவாக்கவும் பா,ஜ,க கூடுதல் கவனம் செலுத்தும். மாற்றுக் கருத்தியலை முன்வைப்பது, களநிலைத் தலைமைகளை அடையாளம் கண்டு ஊக்குவிப்பது, லாபி செய்யும் ஆற்றல் மையங்களை உருவாக்குவது ஆகிய மூன்றிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றால் அடுத்த மே மாதம் இந்தியாவின் முகத்தில் அப்பிய காவி வர்ணம் கரையும். இல்லாவிட்டால் இந்தியா கரையும்.

**-பத்திரிகையாளர், மொழிபெயர்ப்பாளர் அ.தா.பாலசுப்ரமணியன் அவர்களின் ஃபேஸ்புக் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்





கணேசமூர்த்தி

## பத்தாத ஆயிரம்!

கோவை மாவட்டம், பெரியநாயக் கன்பாளையத்தில் 1984-ஆம் ஆண்டு தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெற்றது. கழகம் எதிர்க்கட்சியாக 8 ஆண்டுகளைக் கடந்திருந்த நேரம் அது. எங்கள் மாவட்டத்தின் சார்பாக, ரூபாய் 10 ஆயிரம் நிதியை தலைவர் கலைஞரிடம் வழங்கினோம். அதே கூட்டத்தில் அவர் பேசும்போது நகைச்சுவையாக, ‘பத்தாயிரம் என்பது பத்தாத (பற்றாத) ஆயிரம்’ என்றதும் அரங்கமே சிரிப்பொலியில் அதிர்ந்தது. அடுத்த சில வாரங்களுக்கு அந்தப் பேச்சு கட்சித் தோழர்களிடத்தில் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. அந்தக் கூட்டத்தில் தலைவரை வரவேற்று சால்வை அணிவித்தேன். 20 வயது இளைஞனான எனக்கு அது பெரும் வாய்ப்பு.

**-அர.கணேசமூர்த்தி, மாவட்ட முன்னாள் அவைத் தலைவர், கோவை வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### உதயசூரியன்

**1958-ஆம் ஆண்டு மார்ச் மாதம் கழகத்துக்கு முக்கியமான மாதமாக அமைந்தது. இந்தியத் தேர்தல் ஆணையம் கழகத்தை மாநிலக் கட்சியாக அங்கீகாரம் செய்தது. தேர்தல் சின்னமாக உதயசூரியனை ஒதுக்கியது. இந்திய அரசியல் வரலாற்றில் கட்சி அங்கீகாரம் பெறும்போது, ஒதுக்கப்பட்ட ஒரு சின்னத்தில் 64 ஆண்டுகளாகப் போட்டியிடும் ஒரே கட்சி கழகம் மட்டுமே. இடையில் கட்சிப் பிளவுகளின்போது சின்னத்தையும், கொடியின் அடையாளத்துக்கும் சிக்கல் எழாமல் காப்பாற்றிய கலைஞர், ‘அண்ணா கண்ட ஒரே இயக்கம், அண்ணா தந்த ஒரே சின்னம்’ என கழகத்தையும், உதயசூரியனையும் வரலாற்று அடையாளம் ஆக்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 120




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131